# ஓராயம் சிறப்பாய் இயங்கிடட்டும்

ஓராயம் சிறப்பாய் இயங்கிடட்டும்
ஓரணியில் உறுதியாய் நடந்திடட்டும்
ஒத்த சிந்தனையில் செயற்பட்டிடட்டும்
ஓங்கு புகழுடனே வளர்ந்திடட்டும்

ஆதாயம் பாராமல் உதவிடட்டும்
அறிவுக் கல்வியை ஊட்டிடட்டும்
ஆங்கோர் ஏழைக்கு அறிவூட்டிடட்டும்
அங்கவர் வாழ்வை மலர்த்திடட்டும்

விவசாய வளங்களை வழங்கிடட்டும்
வீட்டுத் தோட்டங்கள் போட்டிடட்டும்
பயிர்களைப் பயிரிடப் பணித்திடட்டும்
பலன்களைப் பெற்றிட வைத்திடட்டும்

பலன்தரு மரங்கள் நாட்டிடட்டும்
பயன்பெறு செடிகள் வளர்த்திடட்டும்
பள்ளிகளில் பணி தொடங்கிடட்டும்
பள்ளி மாணவர்க்கு விழிப்பூட்டிடட்டும்

நீர்வளங்களைப் பேணிக் காத்திடட்டும்
நீர்நிலைகள் அமைத்துப் பேணிடட்டும்
மழைநீரைச் சேமிக்க வழிகாட்டிடட்டும்
மக்களிற்கு இதைப் பழக்கிடட்டும்

மூத்தோர் சேவையைச் செய்திடட்டும்
மதிப்புடன் அவர்களை பார்த்திடட்டும்
தாதிகள் பயிற்சி தந்திடட்டும்
தக்கன செய்து பேணிடட்டும்

கழிவுப் பொருள்களை சேகரித்திடட்டும்
கல்லூரிகளி லிதனை தொடங்கிடட்டும்
பாவனைக்கு மீள்பொருள் ஆக்கிடட்டும்
பணத்தையும் சற்றுப் பெற்றிடட்டும்

இளையவர் தொழிற்கல்வி கற்றிடட்டும்
இலந்திரனியற் கல்வியும் படித்திடட்டும்
சமூகசேவையி லிவரை இணைத்திடட்டும்
சரியான பாதையை உணர்த்திடட்டும்

வறுமையை ஒழித்திட முயன்றிடட்டும்
வளங்களை பெருக்கிட உழைத்திடட்டும்
தொழில்களை ஏற்படுத்தி ஊக்கிடவும்
துயர்களை நீக்கி அணைத்திடவும்

இளையோர் நன்னெறி பழக்கிடவும்
இதயத்தில் நற்சிந்தனை புகுத்திடவும்
மக்கள் விழிப்புணர்வு பெற்றிடவும்
மனதினில் உறுதி கொண்டிடவும்

இணையத்தில் பரப்புரை செய்திடவும்
இதற்காய் சிறப்பாய் இயங்கிடவும்
பெருந்திட்டங்கள் பலதும் தீட்டிடவும்
பொறுப்பா யிணையத்தில் பதிந்திடவும்

ஒராயம் உயர்வாய் இயங்கிடவும்
ஒத்த கருத்துடையோருடன் இணைந்திடவும்
அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றிடவும்
அன்புடன் நம்மக்களுடன் ஒன்றாய்

பள்ளித்தோழர் நாம் மகிழ்வாய்
பணிகளைச் செய்திட விருப்புடனே
இணைந்தே நாமும் இயங்கிடுவோம்
இன்தமிழர் வாழ்வினை உயர்த்திடுவோம்

நன்றி.

அன்புடன்
வேந்தனார் இளஞ்சேய்
28.07.2020

பாடல் வரிகள் - வேந்தனார் இளஞ்சேய்- 28.07.2020
பாடலின் இசைவடிவம்-  வேந்தனார் இளஞ்சேய் 08..11.2024

இசை & குரல் - suno AI